1970 ஆகஸ்ட் 31]

திரு. கே. விநாயகம் : இந்த அஸிஸ்டென்ட் எடிட்டர் இன் ஃபாமிலி ப்ளானிங் என்கிற பதவி ஏன் இரண்டாண்டுக் காலமாகக் காலியாக இருந்தது ? அதற்கு முன்னே இருந்தவர்கள் தொடர்ந்து இருந்தார்களா ? அவரை ஏன் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இந்த வேலையைக் காலியாக வைத்திருந்தார்கள், பிறகு யாரை நியமித்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 20—9—1967–இல்தான் வேலை, இந்திய அரசால் சாங்ஷன் செய்யப்பட்டது. சாங்ஷன் செய்யப்பட்டதிலிருந்து யாரும் போடப்படவில்லை. அந்தப் பதவியைப் பயன்படுத்து-வதா இல்லையா என்ற அளவில் அந்தப் பதவியை அப்படியே வைத்துக் கொண்டிருந்தார்கள். குடும்ப நலத் திட்டத்தின் பணிகள், மற்றவைகள் விரிவாக்கப்பட்ட நிலையில் அதுபற்றி வெளியீடுகள் வெளியிடவேண்டிய அவசியம் என்ற காரணத்தால் நியமிக்கவேண்டும் என்ற அளவுக்கு 1—8—1969-ல் துணை ஆசிரியர் பதவி அப்பொழுதுதான் ஒருவருக்குத் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டது. அந்த வகையில் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நாமாக நிறுத்தினோமே தவிர, ஏற்கனவே இருந்துவருவதை எடுத்துவிடவில்லை.

எஸ். எஸ். எல். சி. பாடமுறை

* 141 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்துக் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் தற்போத-ுள்ள பாட முறையையே அமல் படுத்தவோ, அல்லது மாற்றி அமைக்கவோ செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, நடப்பாண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு அனுப்பப்பட்ட மாணவர்களில், சில பள்ளிக்கூடங்களில் ஒரு மாணவன் கூடத் தேர்வுபெறாத நிலைமை தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த வகையில் மாணவர் ஒருவரும் தேர்வுறாமல் இருந்ததற்குக் காரணம் பாட முறையில் உள்ள குற்றமா, கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் குற்றமா, மாணவர்களுடைய குற்றமா என்பதை அலசிப் பார்ப்பதற்கு ஏதாவது ஒரு வழியை அரசு வகுத்திருக்கிறதா என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாட முறையை அமல்படுத்துவது அல்லது மாற்றியமைப்பது பற்றியது மூலக் கேள்வி. இது மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

திரு. கே. விநாயகம் : கல்விமுறையைத் திருத்தியமைக்கவேண்டும் என்று ஜனாதிபதியிலிருந்து யாராவது கொஞ்சம் கல்வி தெரிந்தவர் வரை சொல்லிக்கொண்டே வருகிறார்களே, இதை எப்பொழுதுதான் திருத்தியமைக்கப் போகிறீர்கள்? அல்லது இருக்கிற ஸிலபஸ்ஸை

[1970 ஆகஸ்ட் 31

போதும், இந்த ஸிலபஸ்படி படித்து வருகிறவர்கள் நாட்டுக்குப் பயன்பட்டால் போதும் என்று அமைச்சு கருதுகிறதா ? 11-வது வகுப்புத் தேர்வு எழுதியவர்களில், அதுவும் கவர்ன்மென்ட் ஹைஸ்கூலைப் பொறுத்துத்தானே 'நில் ரிஸல்ட்' வந்திருக்கிறது இது மாதிரி ஏதாவது ப்ரைவேட் ஸ்கூலில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்களுடைய கேள்விகளில் பின் கேள்வி இதில் எப்படி வரும் ? பாட முறையைத் திருத்தி அமைப்பதுபற்றியுள்ள கேள்விக்கு மட்டும் அமைச்சரவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளுக்குத் தற்போதுள்ள பாட முறையில் மாற்றம் செய்யவேண்டுமென்றால் அதற்குரிய வல்லுநர்களும் மற்றவர்களும் ஆராய்ச்சியின் பேரில் செய்யவேண்டும். இதிலே நாம் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. இதில் மாற்றம் வேண்டும் என்று கோரப்பட்டு, அது பரிசீலனைக்கு வரும்போது ஆராயலாம். இந்த ஆண்டு அதற்கான மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்றால், 'இல்லை' என்று குறிப்பிட்டேன். இந்திய அரசாங்கத்தில் நான்கைந்து குழுக்கள் அதுபற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றன. ஆரம்பப் பள்ளிகளைப்பற்றி, எல்லோருக்கும் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதை எந்த எந்த வகையில் விரிவாக்குவது சாத்தியமாகலாம் என்பதை ஆராய ஒரு குழுவும், தேர்வு முறையை ஆராய்ந்து அதில் ஏதாவது மாற்றங்கள் செய்யலாமா, மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்கு உயர்த்துவதற்கு என்ன என்ன வழிகளைக் கடைப்பிடிக்கலாம் என்பதை ஆராய ஒரு குழுவும், பாடத் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டுமா என்பதை ஆராய ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றினுடைய அறிக்கைகள் வந்தபிறகு, முறையில் மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அப்பொழுது வேண்டுமானால் ஸிலபஸில் மாற்றங்கள் செய்யலாமே தவிர, இப்பொழுது அது பற்றிய குறிப்புகள் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எட்டாவது வகுப்புக்குரிய துணைப் பாடப் புத்தகத்தில், மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களுடைய கதையைப் பாடமாக வைத்திருக்கிறார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு இருப்பதால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியிலிருந்து எழக்கூடியதல்ல.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கக்கூடிய எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுமுறையைப் பொறுத்தமட்டில் இது மெமரியை டெஸ்ட் செய்யத்தான் பயன்பட்டு வருகிறது. மாணவர்களுடைய 'இன்டர்னல் கப்பாஸிட்டி' யைக் கண்டுபிடிக்கப் பயன்படும் முறை ஏதேனும் அரசுக்கு டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனிடமிருந்தோ அல்லது ஏதாவது கல்வி ஆலோசனைக் கமிட்டியிலிருந்தோ அரசுக்கு அனுப்பப்பட்டு, அது பரிசீலிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மாணவர்களுடைய இன்டர்னல் அஸெஸ்மெண்ட், ஆண்டுத் தொகையும், இறுதித் தொகையும் குறிக்கப்படுவது, இவை நான் முதலிலே குறிப்பிட்டது போல, இந்தக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. இது நடைமுறையில் சாத்தியமா என்பதை அறிந்த பிறகு, அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த பிறகு, இப்படி இப்படி மேற்கொள்ளலாம் என்று அவர்கள் கூறிய பிறகு, அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

* 142 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, சென்னை சர்வகலாசாலைப் பகுதிகளுக்குத் தனித் தனியாக எஸ்.எஸ்.எல்.சி. பாட புத்தகங்களைத் தயாரித்து தனித் தனியாகப் பரீட்சைகளை நடத்துவதென்ற யோசனையைப் பரிசீலித்துப் பார்க்கும்படி தமிழ்நாடு அரசாங்கத்திடம் சென்னை சர்வகலாசாலை வலியுறுத்தியுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம், மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர், பள்ளியிறுதித் தேர்வுக்காக இரு பல்கலைக் கழகங்களிலும் தனித்தனிப் பாட நூல்கள் இருக்க வேண்டுமென்றும், இரு பல்கலைக் கழகப் பகுதிகளுக்கும் பள்ளியிறுதித் தேர்வு தனித்தனியாக நடத்தப்பட வேண்டும் என்றும் சென்னைப் பல்கலைக் கழகம் கருத்துத் தெரிவித்தது.

(இ) இக்கருத்துக்கள் குறித்து இரு பல்கலைக் கழகங்களுடன் விவாதிக்கப்பட்டு இரு பல்கலைக் கழகப் பகுதிகளுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளது போன்று பொதுவான பள்ளி இறுதித் தேர்வும், பொதுவான பாடநூல்களும் தொடர்ந்து இருந்து வர வேண்டும் என்று இரு பல்கலைக் கழகங்களும் ஒப்புக்கொண்டன. இந்த இரு பல்கலைக் கழகங்களும் தத்தம் பகுதிகளுக்கான ஆங்கில, தமிழ்ப் பாட நூல்களைத் தனித்தனியாக அச்சிட்டு வழங்கும், ஆயினும், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, வடமொழிப் பாட நூல்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தினால் தொடர்ந்து வெளியிடப்படும்.

திரு. கே. விநாயகம்: இரு பல்கலைக்கழகங்களும் தனித் தனியே அவரவர்களுக்கு உகந்தாவாறு புத்தகங்களை, ஸிலபசுகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று கோரிக்கை தெரிவித்தபோது, பழைய முறையே, அதாவது 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஸிலபஸ் முறையே, அதாவது சபாநாயகர் அவர்கள் படிக்கும் நேரத்தில், நானோ அல்லது அமைச்சரோ படிக்கும் காலத்தில் இருந்துவந்த முறையே இருக்கட்டும் என்று பல்கலைக்கழகம் சொல்லியது. அப்பொழுது "எஸ்ஸே" எழுதுவது அவசியம். பிறகு நடுவே வந்த முறையில், "ஒன் வேர்ட் ஆன்சர்", "ஒன் ஸெண்டன்ஸ் ஆன்ஸர்" தருவது என்று வந்த காரணத்தால் கல்வித் தரமே குறைந்துவிட்டது......